# அருள் ஒளி

இதழ்: 166

பங்குனி ~ 2025



## மாசி மகா மகம் சிறப்பிதழ்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (பங்குனி ~ 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோசன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## ஆசிரியர் உரை

## பிள்ளைகளின் எதிர்காலம் நெறிப்படுத்தப்பட அறநெறிப் பாடசாலைகள் அவசியம்

ஆலயங்கள் தோறும் அறநெறி பாடசாலைகளை உருவாக்குதல் காலத்தின் கட்டாயமாகும். அறநெறி பாடசாலைகள் புதிய தலைமுறைகளை ஆற்றுப்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்து கலாச்சாரத் திணைக்களம் அறநெறி பாடசாலைகளுக்கு சில வசதிகளை செய்து கொடுத்திருக்கின்றார்கள். பாடத்திட்டங்களை உருவாக்கி ஆசிரியர்களுக்கான வழிகாட்டிகளை இலவசமாக வழங்கி வருடத்திலே ஒருமுறை சீருடைகளுக்கான ஊக்கிவிப்புகளையும் செய்திருக்கின்றார்கள். சிறந்த அறநெறி பாடசாலைகளுக்கு இந்து கலாச்சாரத் திணைக்களம் விருதும் வழங்கி இருக்கின்றது. தேசிய மட்டம் வரை போட்டிகளை நடத்தி மாணவர்கள் தேசிய மட்ட போட்டிகளில் பங்கு பெறும் வாய்ப்புகளையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

எனினும் வடக்கில் அறநெறி பாடசாலைகள் எதிர்பார்த்த வெற்றியை இன்னும் அடையவில்லை. கோயில்களின் சூழலில் அறநெறிப் பாடசாலைகளை உருவாக்கிய போதிலும் பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை அறநெறி பாடசாலைகளுக்கு அனுப்புவது மிகவும்

குறைவாக உள்ளது. வெறும் ஏட்டுக்கல்வியால் மட்டும் பயனில்லை. தர்ம சிந்தனைகளை சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கு புகட்ட வேண்டும். அறம் சார்ந்த நெறிகள் அறியாமல் போகின்ற போது எதிர்கால தலைமுறைகள் பாதிப்படைவது அதிகம். இன்று இளைய தலைமுறைகள் பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபடுகின்றார்கள். போதைவஸ்து என்ற பொல்லாத சூழல் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இது பெரும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது. எமது அடுத்த தலைமுறை மிகவும் பாதிக்க கூடிய போதைவஸ்துக்கு அடிமையாகிய ஒருவர் திருமணமாகி பிள்ளைகள் பிறக்கின்ற போது பிறப்பிலேயே குழந்தைகள் நலிவுற்ற தன்மையாக, நோய் வாய்ப்புள்ள குழந்தைகளாக பிறக்கின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது.அறம் சார்ந்த கல்வி சரியாக புகட்டப்படுமானால் சிறுபராயத்திலேயே தெய்வ நம்பிக்கையும், தாய் தந்தை பேணுவதும், மண் பற்றும், நீதி நியாயம் பற்றிய தெளிவும் பிள்ளைகளுக்கு இருக்கும். எனவே, எம் சமூகத்திலே அறநெறிப் பாடசாலைகள் மிகவும் அத்தியாவசியமானவை. யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் அறநெறிப் பாடசாலைகள் செயற்பட வேண்டும் என்பதற்காக வெள்ளிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள் யாவற்றையும் நிறுத்துமாறு வலியுறுத்தினார்கள். சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும் அவருடைய முயற்சி பயனளித்தது. ஆனால் அறநெறி பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்ப வேண்டியவர்கள் அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள் இந்த நிலை மிகவும் பெரிய இடையூறுகளை எதிர்காலத்தில் விளைவிக்கும்.

கோயில்கள் தோறும் இப்பொழுது பிரமாண்டமான மண்டபங்கள் கட்டப்படுகின்றது. அந்த மண்டபங்களில் அறநெறி பாடசாலைக்கு ஒரு வாய்ப்பை கட்டாயம் கொடுக்க வேண்டும். கிராமங்களில் இளைப்பாறிய ஆசிரியர்கள் இந்த சேவையிலே நிச்சயமாக ஈடுபட வேண்டும். ஆசிரியர் சமூகத்தால் தான் ஒரு கிராமத்தை புனிதமாக வளர்த்தெடுக்க முடியும். குறிப்பாக முன்பு வடக்கு கிழக்கு தமிழர்களின் கல்வி விருத்தியில் ஆசிரியர்களின் பங்கு என்பது எல்லையற்றது. வடக்கு கிழக்கு ஆசிரியர்களை பார்த்து பொறாமைப் பட்டவர்கள் தென் இலங்கை சிங்கள மக்கள். இன்று வடக்கு கிழக்கு ஆசிரியர்கள் பொதுப் பணிகளில் ஈடுபடுவது குறைந்துவிட்டது. முன்பு கிராமத்து நீதவானாக ஆசிரியர்கள் செய்யப்படுவார்கள். எந்தப் பிரச்சினை என்றாலும் தீர்த்து வைப்பதும் மாணவர்களுக்கு புத்திமதி கூறுவதும், பாடசாலைகளை

விட்டு வெளியேறியவர்களுக்கு கூட ஒரு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதும் ஆசிரியர்களுடைய பங்களிப்பாக இருந்தது. இன்று காலம் மாறிவிட்டது. இன்றைய ஆசிரியர்கள் இளைப்பாறுகின்ற போது தயவு செய்து தங்களுடைய கிராமத்தில் இருக்கின்ற இளையவர்கள் பற்றி சிந்தித்து, இத்தகைய அறநெறி பாடசாலைகள், சமூக விழிப்புணர்வு நிறுவனங்களில் ஆசிரியர்கள் அங்கம் வகித்தால் அது பெரும் பயனாக இருக்கும். அறநெறி பாடசாலைகளினுடைய அத்தியாவசியம் அனைவரும் உணர்ந்த போதிலும். அதில் அக்கறை காட்டும் தன்மை குறைவாக இருப்பது நமது கவன குறைவு. அத்தகைய நிலை மாற வேண்டும் என்பதே எல்லோருடைய பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

*கலாநிதி. ஆறு. திருமுருகன்*
*ஆசிரியர் ~ அருள்ஒளி*



# பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் மாசி மகா மகம்

## மகாமகம் எப்போது எங்கு நடைபெறும்?

தேவகுருவாகிய பிரகஸ்பதி என்றழைக்கப்படும் வியாழன், சிம்ம ராசியுடன் பொருந்தும்போது, அவரோடு மாசி மாதத்தில் மக நட்சத்திரமும், பௌர்ணமியும் சேரும் நிலையில், கும்ப ராசியில் சூரியன் இவர்களையும், இவர்களை சூரியனையும், முழுப் பார்வையுடன் பார்க்கும் நாளே மகாமகப் புண்ணிய நாளாகும்.

குரு பகவான் கும்ப ராசிக்கு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையே வருவதால் மகாமகப் புண்ணிய காலமும் 12 ஆண்டுகளுக்கொரு முறை வருகிறது. பிரம்மதேவர் கும்பேசரைப் பூசிப்பதற்குத் தகுந்த காலம் மாசித்திங்களே என மனத்துள் கொண்டு, சீலம் நிறைந்த அந்த மாதத்துப் பூர்வ பட்சத்திலே வரும் அசுவதி நட்சத்திரத்தில் புனித தீர்த்தத்தில் மூழ்கி, பூசையைத் தொடங்கி, மாசி மக மகோத்ஸவம் செய்வித்தார்.

ஒன்பது நாள் விழாவைச் சிறப்பாகச் செய்து, பத்தாவது என்று சொல்லப்படுகின்ற திருநாளிலே, மக நாளிலே, அக்னித் திக்கில் உள்ள தீர்த்தத்தில் கும்பேசருக்கு தீர்த்தம் ஆட்டு விழாவும் செய்தார். அதுவே மக விழா என்றழைக்கப்படுகிறது.

கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் மாசி மாத மகம் கூடிய நன்னாளில் மகா மக விழாவாகக் கொண்டாடப்படுவது எத்தனையோ நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகிறது. நதி தேவதைகளும் தங்களிடம் மக்கள் நீராடுவதால் ஏற்பட்ட பாவங்கள் தீருவதற்காக இந்த நாளில் கும்பகோணத்திற்கு வந்து இறைவனருளால் புனிதம் பெற்றதாகப் தல புராணம் கூறும்.



மகா மகக் கரையில் உள்ள காசி விசுவநாதர் ஆலயத்தில் இந்நதி தேவதைகளுக்கென்று தனி சன்னதி உள்ளது. எனவே அன்றைய தினத்தில் கங்கை, யமுனை போன்ற புனித

நதிகள் இத் திருக்குளத்தில் வந்தடைவதால் அது மேலும் புனிதம் பெறுகிறது.

வானவியலின்படி சூரியன், ஆண்டின் 12 மாதங்களில் 12 இராசிகளைச் சுற்றி வருகிறது.
சந்திரன் பூமியை 30 நாட்களில் சுற்றுகிறது. ஒரு இராசியிலிருந்து, இன்னொரு இராசிக்கு குரு இடம்பெயர ஓர் ஆண்டு ஆகிறது. சிம்ம இராசியில் குருவும், சந்திரனும் வரும்போது, கும்ப இராசிக்கு சூரியன் வருகிறது.

அப்போது சூரியன் நேரடியாக குருவையும், சந்திரனையும் பார்க்கிறது. இந்நிகழ்ச்சி பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை நடக்கிறது. இதனை மகாமகம் என்றழைக்கிறோம்.

## மகாமகத்தின் புராண வரலாறு

ஒரு சமயம் புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, கோதாவரி, சரயு, குமாரி (தாமிரபரணி?), பயோர்'ணி ஆகிய நவநதிகளும் ஒன்றுசேர்ந்து கயிலாய மலை சென்று சிவபெருமானை வணங்கி, எங்களிடத்தில் மகாபாவிகளும், மிகப்பெரிய பாதகங்களைச் செய்தவர்களும், நீராடி எல்லா பாவங்களையும் எங்களிடம் விட்டுவிட்டு நற்கதி அடைந்து வருகிறார்கள். எங்களிடம் விட்ட பாவங்களை நாங்கள் எங்கு சென்று போக்கிக் கொள்வது என்று கேட்டார்கள். அதற்கு சிவபெருமான் ”கும்பகோணத்தில் அக்னித் திக்கில் ஓர் தீர்த்தமுண்டு. அதில் குரு சிம்ம ராசியில் இருக்கும் போது வரும் மக நட்சத்திரத்துடன் கூடிய பவுர்ணமி நாளை மகாமக நாளென்பர். அந்நாளில் அத்தீர்த்தத்தில் முறைப்படி நீராடினால் உங்களின் பாவங்கள் நீங்கும்” என்றார். அதன்படி நதிகள் புனித நீராடி தங்கள் பாவங்களைப் போக்கிக் கொண்டன என்பது புராணக் கதையாகும்.இந்த மகாமக தீர்த்தத்தை ஒரு தடவை வணங்கினால் எல்லா தேவர்களையும் வணங்கிய புண்ணியம் கிடைக்கும். இந்த மகாமகக் குளத்தை ஒருமுறை சுற்றி வந்தால் இந்த பூமியை நூறு முறை சுற்றிய புண்ணியம் கிடைக்கும். இந்த மகாமகக் குளத்தில் ஒரு தடவை நீராடினால் கங்கைக் கரையில் நூறு ஆண்டுகள் வாழ்ந்து மூன்று காலமும் நீராடிய பலன் கிடைக்கும். இந்த புண்ணிய நாளில் மகாமகக் குளத்தில் வடபுறத்தில் உள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடியவர்களுக்கு தனது கோத்திரம், மனைவியின் கோத்திரம், உள்ளிட்ட ஏழு

கோத்திரங்களையும் சேர்ந்தவர்கள் (ஏழு தலைமுறைகளுக்கு) நற்கதி அடைவர். வடபுறத்தில் உள்ள கிணற்றில் மகாமகத்தன்று காசியிலிருந்து கங்கை வருகிறது. அங்கு பல குமிழிகள் இடப லக்னத்தில் ஏற்படுவதைக் காணலாம்.இந்த மகாமக குளத்தினை நவகன்னிகளும், திசைத் தெய்வங்களும் உண்டாக்கின என்பதால் இந்த தீர்த்தம் மகாமக தீர்த்தம் என்றும் நவகன்னியர் தீர்த்தமென்றும் அழைக்கப்படுகின்றன.

## இந்தக் குளத்தில் 20 தீர்த்தங்கள் உள்ளன

வாயு தீர்த்தம்
கங்கா தீர்த்தம்
பிரம்ம தீர்த்தம்
யமுனை தீர்த்தம
குபேரத் தீர்த்தம்
கோதாவரி தீர்த்தம்
ஈசானிய தீர்த்தம்
நர்மதை தீர்த்தம்
இந்திர தீர்த்தம்
சரஸ்வதி தீர்த்தம்
அக்னி தீர்த்தம்
காவேரி தீர்த்தம்
யம தீர்த்தம்
குமரி தீர்த்தம்
நிருதி தீர்த்தம்
கிருஷ்ணா தீர்த்தம்
தேவ தீர்த்தம்
வருண தீர்த்தம்
சரயு தீர்த்தம்
கன்னிகா தீர்த்தம்.(கன்னிகா தீர்த்தத்தில் அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் உள்ளன).

## மகாமகக் குளம்

கும்பகோணம் நகரிலிருக்கும் மகாமகக் குளத்தின் பரப்பளவு 6 ஏக்கர் 2813 சதுர அடியாகும்.

இதனைச் சுற்றியுள்ள 16 சன்னதிகள் அருள்மிகு சோடசமகாலிங்க சுவாமி என்று அழைக்கப்படுகிறது. அவற்றில் சிவலிங்கங்கள் பிரதி‘டை செய்யப்பட்டுள்ளன. அருள்மிகு சோடசமகாலிங்க சுவமி திருக்கோயில், கும்பகோணம் நகர் அருள்மிகு காசிவிஸ்வநாத சுவாமி திருக்கோயிலின் துணை ஆலயமாகும்.

அருள்மிகு சோடசமகாலிங்க சுவாமியின் திருநாமங்கள் வருமாறு

பிரமதீர்த்தேஸ்வரர்
முகுந்தேஸ்வரர்
தனேஸ்வரர்
விருஷபேஸ்வரர்
பாணேஸ்வரர்
கோணேஸ்வரர்
பக்திகேஸ்வரர்
பைரவேஸ்வரர்
அகத்தீஸ்வரர்
வியாசேஸ்வரர்
உமா பாகேஸ்வரர்
நிருதீஸ்வரர்
பிரம்மேஸ்வரர்
கங்காதரேஸ்வரர்
முக்தி தீர்த்தேஸ்வரர்
க்ஷேத்திர பாலேஸ்வரர்

## மகாமகத் தீர்த்தம்

இத்திருக்குளத்தை மகாமகக் குளம், மகாமகத் தீர்த்தம், கன்னிகா தீர்த்தம், அமுதவான தீர்த்தம் என அழைப்பர். புண்ணிய காலத்தில் புனித நீராடும் வகையில் இத்திருக்குளத்தில் படிக்கட்டுகள் அமைந்துள்ளன.

மகாமகக் குளத்தில் நீராடும் முன் காவிரியில் சங்கல்பம் செய்து நீராட வேண்டும். மகாமகத்தன்று அருள்மிகு காசிவிசுவநாதர், அருள்மிகு அபிமுகேஸ்வரர், அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர், அருள்மிகு ஆதிகம்பட்ட விசுவநாதர், அருள்மிகு கோடீஸ்வரர், அருள்மிகு காளஹஸ்தீஸ்வரர், அருள்மிகு பாணபுரீஸ்வரர், அருள்மிகு அமிர்தகலசநாதர் ஆகிய பன்னிரண்டு சைவத் தலங்களுக்கும், அருள்மிகு சாரங்கபாணி, அருள்மிகு இராமசாமி, அருள்மிகு ஹனுமார், அருள்மிகு சரநாராயணப் பெருமாள், அருள்மிகு ஆதிவராகப் பெருமாள் திருக்கோயில், அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில், அருள்மிகு சக்கரபாணி பெருமாள் ஆகிய ஏழு வைணவத் தலங்களுக்கும் சென்று வணங்குவது அதிக பலனைத் தரும். மேலே குறிப்பிட்ட பன்னிரண்டு சைவத் தலங்களிலிருந்தும் சுவாமிகள் எழுந்தருளி மகாமகக் குளம் சென்று தீர்த்தவாரி நடைபெறும்.



அதேபோல் ஐந்து வைணவத் தலங்களிலிருந்து சுவாமிகள் எழுந்தருளி காவிரி நதியில் தீர்த்தவாரி நடைபெறும்.இப்புனிதத் திருநாளில், ஈரேழு உலகம் சேர்ந்த தேவர்கள் ஒன்றுகூடி மகாமகக்குளத்தில் புனித நீராடுவார்கள் என்பது ஐதீகம்.

மகாமகத் திருக்குளம் மற்றும் மகாமகத் திருக்கோயில்கள் புராண வரலாறு
கிருதயுகம் : பிரம்மன் தவம் செய்தமையால் மகாமகக் குளத்திற்கு பிரம்ம தீர்த்தம் என்று பெயர்
திரேதயுகம் : பாபங்களைப் போக்கியதால் பாபநோதம் என்று பெயர்
துவாபரயுகம் : முக்தி அளித்ததால் முக்தி தீர்த்தம் என்று பெயர்
கலியுகம் : ஸ்ரீ நவகன்னியர்கள் பூஜித்தமையால் கன்யா தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது.
ஆதாரம் : வீரசிங்காதனப்புராணம்

## குடந்தைப் புராண வரலாறு

முற்காலத்தில் யுகமுடிவில் ஏற்படும் ஊழியில் (பிரளயம்) சகல ஜீவராசிகளும் அழிந்து போகக் கூடிய நிலையை எண்ணிக் கவலையுற்ற படைப்புக் கடவுளான பிரம்மதேவன் அதை தவிர்க்கக் கருதி கயிலை நாதனை (சிவபெருமான்) துதித்து நிற்க நன்கயிலைநாதனும் (சிவபெருமான்) பிரம்ம தேவனின் வேண்டுகோளுக்கு இணங்கி அவ்வழிவைத் தடுக்கும் பொருட்டு சிரு‘டி பீஜத்தை பிரும்ம தேவனிடம் அளித்து நரை, மூப்பு, சாக்காடு இவற்றைத் தடுக்க வல்ல ஆற்றல்மிக்க அமிர்தத்துடன் கலந்து, பிசைந்து முப்பத்து முக்கோடி ஜீவராசிகளின் வித்துக்களையும், நான்கு வேதங்களையும் அவற்றிற்குட்பட்ட புராணம், இதிகாசங்களையும், 12 ராசி களையும், 27 நட்சத்திரங்களையும் கும்பத்தில் அடக்கி கும்பத்தின் வாயிலில் மாவிலை, தேங்காய், பூணூல், தர்ப்பைப்புல், வஸ்திரம், சந்தனம், குங்குமம் இவைகளால் அலங்கரித்து பூரண கும்பமாக உறியிலே கட்டி மேரு மலையின் உச்சியில் வைக்கப்பட்டது.
ஊழிக்காலத்தில் ஏழு கடலும் பொங்கி மேரு மலையும் மூழ்கிற்று. அதிலிருந்த குடம் உறியோடு மிதந்து காற்றின் திசையால் தென்திசை நோக்கி மிதந்து வந்தது. வெள்ளம் வற்றி கும்பம் குடமூக்கை அடைந்தது. சிவபெருமான் வேடுவ உருவம் தாங்கி (கிராத மூர்த்தியாக) எழுந்தருளி பாணம் எய்ய, அந்த அமிர்த கும்பம்

மூன்று பிரிவுகளாக சிதைவுண்டது. அக்கும்பத்தின் வாயில் விழுந்த இடம் குடுவாயில் (இன்று குடவாசல் என வழங்கப்படுகின்றது). நடுப்பகுதியில் விழுந்த இடம் திருக்கலையநல்லூர் (அதனால் சாமியின் திருநாமம் அமிர்த கலசநாதர் மற்றும் அம்பிகையின் திருநாமம் அமிர்தவள்ளி என்று அழைக்கப்படுகிறது.) கீழ்பாகம் தங்கிய இடம் திருக்குடமூக்கு. அதிலிருந்து அமிர்தம் ஐந்து குரோஸ அளவு ஓடி இரண்டு இடங்களில் தேங்கி நின்றது.

1.மகாமகத் திருக்குளம்
2.பொற்றாமரைக் குளம்

அமிர்தம் பரவிய பஞ்ச குரோஸ தலங்கள்
1.திருவிடைமருதூர்
2.திருநாகேஸ்வரம்
3.தாராசுரம்
4.சுவாமிமலை
5.திருப்பாடலவனம் (கொரநாட்டுக்கருப்பூர்)

சிவபெருமான் காசியிலிருந்து நவகன்னிகைகளை மகாமகத் தீர்த்தத்திற்கு அழைத்து வரும்போது மேற்படி பஞ்ச குரோஸ தலங்களை வழிபட்டு மகாமகத் தீர்த்தத்தில் நீராடி காசி விஸ்வநாதர் திருக்கோயிலில் (மகாமகக் குளம் வடகரையில்) எழுந்தருளினார். ஸ்ரீநவ கன்னிகைகள் மகாமகத் திருக்குளத்தில் தெற்கு நோக்கி எழுந்தருளி வீற்றிருக்கின்றார்கள்.

1. சிவபெருமான் கைலாயத்திலிருந்து நவகன்னிகைகள் ஒன்பதின்மரையும் மகாமகத் திருக்குளத்திற்கு அழைத்து வந்து பாபங்களைப் போக்கினார். அவர்கள் கும்பகோணம் காசிவிஸ்வநாதர் திருக்கோயிலில் மேற்கு முகமாக வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்கள்.

2. அமிர்த கலசத்திலிருந்து குடமூக்கு தங்கிய இடம் அருள்மிகு கும்பேசுவரர் திருக்கோயிலாகும். அமிர்த கலசம் உடைந்த பொழுது அங்கிருந்த மண்ணைப் பிசைந்து சிவலிங்க வடிவமாக்கி பூஜித்து சிவபெருமான் அதனுள் உறைந்தார்.

3. அமிர்த கலசத்திலிருந்து வில்வம் விழுந்த இடம் அருள்மிகு நாகேஸ்வரர் (வில்வவனேஸ்வரர்) திருக்கோயிலாகும்.

4. அமிர்த கலசத்திலிருந்த உறி (சிக்கேசம்) விழுந்த இடம் அருள்மிகு சோமேஸ்வரர் திருக்கோயிலாகும்.
5. அமிர்த கலசத்திலிருந்த பூணூல் (யக்ஞோபவிதம்) விழுந்த இடம் கௌதமேஸ்வரர் (உபவீதநாதர்) திருக்கோயிலாகும்.

6. அமிர்த கலசத்திலிருந்த தேங்காய் (நாரிக்கேளம்) விழுந்த இடம் அருள்மிகு அபிமுகேஸ்வரர் திருக்கோயிலாகும்.

7. சிவபெருமான் வேடுவ உருவம் தாங்கி அமிர்த கலசம் உடைக்க பாணம் எய்த இடம் அருள்மிகு பாணபுரீஸ்வரர் திருக்கோயிலாகும்.

8.அமிர்த கலசத்திலிருந்த பு்‘பங்கள் விழுந்த இடம் அருள்மிகு ஆதிகம்பட்ட விஸ்வநாதர் திருக்கோயிலாகும். (மாலதிவனம்)

9. அமிர்த கலசத்திலிருந்த மற்ற உதிரிப் பாகங்கள் விழுந்த இடம், அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலாகும்.

10 அமிர்த கலசம் உடைந்தபோது அமிர்தத் துளிகள் கொட்டையூர் அருள்மிகு கோடீஸ்வரர் திருக்கோயிலின் கிணற்றில் சிதறியது.

11. அமிர்த கலசத்திலிருந்து சந்தனம் விழுந்த இடம் அருள்மிகு காளஹஸ்தீசுவரர் திருக்கோயிலாகும்.

12. அமிர்த கலசத்தின் நடுபாகம் விழுந்த இடம் அருள்மிகு அமிர்தகலசநாதர் திருக்கோயிலாகும்.

ஒரே நேரத்தில் 12 சைவத் திருக்கோயில்களின் சுவாமிகள், ஒரே இடத்தில் எழுந்தருளி தீர்த்தவாரி கொடுப்பது கும்பகோணம் மகாமகத்திருக்குளத்தில் மட்டுமே. இந்நிகழ்வு வேறு எங்கும் கிடையாது.

## நவநதிக் கன்னியர் சிறப்புகள்

அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலில் ஒன்பது நதிகளும் நவகன்னியராக இருந்து அருள்பாலிக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இயற்பெயரோடு கூடிய 12 திருநாமங்கள் உள்ளன. பூஜிக்கின்றபோது இத்திருநாமங்களைச் சொல்லி வழிபடுதல் வேண்டும். (12 ஓ 9 ஶ்ரீ 108). இவையே மந்திரங்களாகவும் அமைகின்றன.

**கங்கை:**
கங்கா, திரிபதகை, தேவி சீமதி, சானவி, வீட்டு மாதா, உலோக மாதா, சுபர்த்துனி, மேருசம்பவை, திரிலோசனை, சடோற்பூதை, சத்த தாரா, சுபாவாகை என்பனவாகும். இவ்வன்னையை வழிபடுவதால் துன்பம் தொலைந்து கயிலை கிட்டும். இத்தீர்த்தத்தில் மகாமகத்தன்று நீராடினால் கங்கையில் 16,000 தடவை நீராடிய புண்ணியத்தை ஒருங்கே பெறலாம். சாயுச்சிய பதவி கிடைக்கும்.

**யமுனை:**
யமுனை, சூரிய சம்பூதை, காளிந்தி, யமசுவசா, சுத்தை, காமதை, சாந்தை, அனந்தை, சுபார்ங்கின, விசுப்பாதை, வசுமதி, வசுப்பீரீதை என்பனவாம். இவ்வன்மையை வணங்கினால் நிறைந்த செல்வத்தை அளிப்பாள்.

**நருமதை:**
நருமதை, சோமமுகி, சோமசேகரப் பிரியை, மருமபீவி, சுமாமார்த்தினி, தரிசனி, சுப்பிரபை, சுலபை, புண்ணியை, இரேவை, மேகல கன்னிகை, சருவக்கியை என்பனவாம். இவ்வன்னையை வணங்கினால் வச்சிராயுதம் போன்ற பாவத்தைத் தீர்ப்பாள்.

**சரஸ்வதி:**
சரஸ்வதி, சாந்தவை, சமரூபி, சமப்பிரதை, ஞானவயிராக்கியதை, ஞானரூபி, அஞ்ஞான விபேதினி, மேரு கோடரசம்பூதை, மேகநாத நுவாத்தினி, பிரதீசி, சண்டேகேஸ்வர், மாயா விச்சேதகாரிணி என்பனவாம். இவ்வன்னையை வணங்கினால் மெய்ஞானமும் வைராக்கியமும் கிடைக்கும்.

**காவேரி:**
பொன்னி, விதிசம்பூதை, கலியாணி, சாமதாயினி, கலியாண தீர்த்த ரூபி, சையாசவ உற்பவை, உலோபாமுத்திரா, சுவாசாஸ்யாமா, கும்ப சம்பவ வல்லவை, விண்டு மாயை, கோளிமாதா, தக்கணபதசாவனி என்பனவாகும். இவ்வன்னையை வணங்கினால் அகம்பாவம் நீங்கும். நினைத்தவற்றைப் பெறலாம்.

**கோதாவரி:**
கோதாவரி, கோதை, கவுதமவநாசிநி, சத்தஸ்ரோதை, சத்தியவதி, சத்தியரூபி, சுவாசினி, கலபை, சூக்குமதே காட்டியை, வேகாவர்த்தை, மலாபிகை, பத்தவிட்டதை என்பனவாகும். இவ்வன்னையை வணங்கினால் நினைத்தவற்றைத் தந்திடும் இயல்பினள்.

**துங்கபத்திரா:**
கன்னியா நதி, தேவி, கனகாயை, கரூச்சை, கலாவதி, காமதை, காமப்பிரிய வரப்பிரதை, காளி, காமப்பிரதை, காலதாயினீ, கடமாகலை, துங்கபத்திரா என்பனவாகும். இவ்வன்னையை வணங்கினால் 16,000 அசுவமேத யாகம் செய்த பலனைப் பெறலாம்.

**கிருஷ்ணவேணி:**
பயோட்டனி, பாபகாரிணி, பாலகை, பரிமோதினி, பூரனை, பூர்ணாவதி, மோகை, மேகாவதி, சுபை, அந்தர்வேகதி, வேகை, சரிவேச்சித பலப்பிரதை என்பனவாகும். இவ்வன்னையை வணங்கினால் காமதேனு வாழும் உலகம் கிட்டும்.

**சரயு:**
சரயு, சண்டவே காட்டியை, இட்சுவாகு குல வல்லபை, ராமப் பிரியை, சுபாராம தடத்துவய விராசிதை, சரப்பிர விருத்தை, எக்யாங்கை எக்கிய பலதாயிணி, சீரங்க வல்லபை, மோகதாயினீ, பூரண காதை, பத்த விட்டதான சவுண்டீரை என்பனவாகும். இவ்வன்னையை வணங்கினால் கொடுங்கலியால் (சனி) படும் துயரைப் பறந்தோடச் செய்வாள்.

## மகாமகத் திருக்குளத்தில் தீர்த்தவாரி கொடுக்கும் திருக்கோயில்கள்

1. அருள்மிகு காசிவிசுவநாதர் திருக்கோயில், கும்பகோணம் நகர்.
2. அருள்மிகு ஆதிகும்பேசுவரசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்.
3. அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்
4. அருள்மிகு சோமேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்
5. அருள்மிகு கோடீஸ்வரசுவாமி திருக்கோயில், கொட்டையூர், கும்பகோணம் நகர்
6. அருள்மிகு காளஹஸ்தீசுவரர் திருக்கோயில், கும்பகோணம் நகர்
7. அருள்மிகு கௌதமேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம் நகர்
8. அருள்மிகு அமிர்தகலசநாதசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்
9. அருள்மிகு பாணபுரீசுவரர் திருக்கோயில், பாணாதுறை, கும்பகோணம் நகர்
10. அருள்மிகு அபிமுகேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம் நகர்
11. அருள்மிகு ஆதிகம்பட்டவிஸ்வநாத திருக்கோயில்,

கும்பகோணம் நகர்
12. அருள்மிகு ஏகாம்பரேஸ்வர சுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்

## மகாமக குளத்திலுள்ள தீர்த்தங்களும் பலன்களும்

இந்திர தீர்த்தம் - வானுலக வாழ்வு அளிக்கும்
அக்கினி தீர்த்தம் - பிரமஹத்தி நீங்கும
யம தீர்த்தம் - யம பயமில்லை
நிருதி தீர்த்தம் - பூத, பிரேத, பைசாச குற்றம் நீங்கும்
வருண தீர்த்தம் - ஆயுள் விருத்தி உண்டாகும
வாயு தீர்த்தம் - பிணிகள் அகலும்
குபேர தீர்த்தம் - சகல செல்வங்களும் உண்டாகும
ஈசான தீர்த்தம் - சிவனடி சேர்க்கும
பிரம தீர்த்தம் - பிதிர்களைக் கரையேற்றும
கங்கை தீர்த்தம் - கயிலை பதவி அளிக்கும்
யமுனை தீர்த்தம் - பொன்விருத்தி உண்டாகும்
கோதாவிரி தீர்த்தம் - இ'ட சித்தி உண்டாகும
நருமதை தீர்த்தம் - திடகாத்திரம் உண்டாகும்
சரசுவதி தீர்த்தம் - ஞானம் உண்டாகும்
காவிரி தீர்த்தம் - புருஹார்த்தங்களை நல்கும்
குமரி தீர்த்தம் - அசுவமேத பலன்களைக் கொடுக்கும்
பயோடினி தீர்த்தம் - கோலாகலம் அளிக்கும்
சரயு தீர்த்தம் - மனக்கவலை தீரும்
கன்னிகா தீர்த்தம் (அறுபத்தாறு - துன்பம் நீங்கி இன்பம் கோடி தீர்த்தம்) கைகூடும்
தேவ தீர்த்தம் - சகல பாவங்களும் போக்கி தேவேந்திர பதவி கிட்டும்.

## நீராடுவதன் நோக்கம்

புண்ணிய தீர்த்தங்களிலும், நதிகளிலும், கடலிலும் நீராடுவது புண்ணியச் செயலாகப் புராணங்களில் குறிப்பிடப்படுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றையும் பிறவி ஈடேறுவதற்காக தீர்த்த யாத்திரை செய்பவர்கள் அத்தியாவசியமாகக் கருதுவர்.

காசி- ராமேசுவர யாத்திரை போன்றவை இதில் அடங்கும்.

புண்ணிய நதிகள் சங்கமம் ஆவதால் கடல் நீராடுதலை விசேஷ நாட்களில் மேற்கொள்வர். மகோதய புண்ணிய காலங்களில் சமுத்திர ஸ்நானம் செய்வதும்,பித்ருக்களை வழிபடுவதும் மிகுந்த பலன்களை அளிக்கும்.

பல நேரங்களில் புனித நீராடுவதன் நோக்கத்தை நாம் மறந்து விடுகிறோம். அது உடல் அழுக்கைக் களைவதற்காக மேற்கொள்வது அல்ல. உள்ளத்து அழுக்கு நீங்குவதே அதன் தனிச் சிறப்பு என்பதை நீராடுபவர் ஒவ்வொருவரும் உணர வேண்டும். நான் மகாமகத்திற்குச் சென்று வந்தேன் என்று சொல்லிக் கொள்வதைக் காட்டிலும் அப்படிச் சென்றதால் ஏற்பட்ட ஆன்மலாப அனுபவத்தையே ஒவ்வொருவரும் சிந்தித்து மகிழ வேண்டும். நாம் அங்கு செல்வது கூட்டத்தை வேடிக்கை பார்ப்பதற்கோ, கடைகளில் பொருள்கள் வாங்குவதற்கோ நிச்சயமாக இல்லை.

ஒவ்வொரு நாளும் பாசிக் குளம் போல மீண்டும் மீண்டும் அழுக்குப் படியும் மனம் நமக்கு உண்டு. அப்பாசியை பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அகற்றினால் போதாது. அன்றாடம் மேற்கொள்ளும் சிவ பூஜை,சிவ சிந்தனை ஆகியவை அவ்வப்போது மனத்தைத் தூய்மைப் படுத்தி விடும். அப்படியானால் மகா மகம் எந்தவகையில் தூய்மை செய்யும் எனக் கேட்கலாம். அது பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படும் கும்பாபிஷேகம் போன்றது. மனமானது மேன் மேலும் தூய்மை ஆகி இறைவன் அமரும் பெருங்கோயிலாக ஆக வேண்டும் என்பதே இதன் நோக்கம்.



# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த ஏடு தொடக்கும் வைபவம்

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தைப்பூச தினத்தன்று 11.02.2025 ஏடு தொடக்கி வைக்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. பல குழந்தைகளின் கல்விக் குவியலான பயணம், செஞ்சொற்செல்வர் அவர்களால் இந்த புனிதத் திருத்தலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பழமையான வழக்கத்தின்படி, குழந்தைகளின் கல்வி பயணத்தை தெய்வீகமான சூழலில் தொடங்குவதற்கு இந்த நிகழ்வு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் தங்களின் பிள்ளைகளை அறிமுகம் செய்ய, அறம் சார்ந்த சூழலில் அறிவுக் கதவுகள் திறக்கப்பட்டன.

தெய்வம் முன்னிலையில் எழுத்தறிவை தொடங்குவது கல்விக்கு ஒரு நல்ல அடிப்படையாக கருதப்படுகிறது. குழந்தைகள் எழுத்துக்களை தொடங்கிய தெய்வீக தருணம், அவர்களின் கல்வியில் சிறப்பான முன்னேற்றத்திற்கும் உயர்விற்கும் காரணமாக அமையும். இந்த நிகழ்வு, பிள்ளைகள் மட்டுமல்லாது சமூகத்திற்கும் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாக அமைந்தது.






# தெய்வீக இசையில் திளைத்த பக்தர்கள்




இந்தியாவின் புகழ்பூத்த இசைத் துறையில் வல்லவர்களான சீர்காழி அருணா அகிலா சகோதரிகள் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் திருமுறைக் கலாநிதி துணைப் பேராசிரியர் தி. பாலச்சந்திரன் அவர்கள் 04.02.2025 அன்று தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்திற்கு வருகை தந்து, பக்தர்களுக்கு அற்புதமான இசை அனுபவத்தை வழங்கினர்.

இந்த நிகழ்வு இசை ரசிகர்கள் மற்றும் பக்தர்களுக்கு ஒருபோதும் மறக்க முடியாத தருணமாக அமைந்தது. அருள் நிறைந்த தெய்வீகச் சூழலில் அவர்கள் வழங்கிய இசைக் கச்சேரி, பக்தியையும் அமைதியையும் பரப்பியது. திருமுறைகள் மற்றும் பக்தி இசையின் இனிமையை அவர்கள் தனது குரலின் வழியாக வெளிப்படுத்த, கலையுணர்வும் ஆன்மிகத் திளைப்பும் ஒருசேர உணரப்பட்டன.




இந்த நிகழ்வின் போது தேவஸ்தானம் பக்தர்களின் திரள்வான வரவேற்பைப் பெற்றது. இசையின் மூலம் ஆன்மிகத்தை அனுபவிக்கும் வாய்ப்பை பெற்ற பக்தர்கள், அமைதி மற்றும் மகிழ்ச்சியை உணர்ந்தனர். இசைக் கச்சேரியின் நிறைவு, அனைவரின் உள்ளத்திலும் நீங்கா திருப்தியையும் ஆனந்தத்தையும் ஏற்படுத்தியது.

# ஆலயத்தில் இராகு காலத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்யும் முறை




அம்பாள் அடியார்களே...

ஒரு நாளில் உள்ள இருபத்தி நாலு மணி நேரத்தில் ஒன்றரை மணி நேரம் ராகுவும், ஒன்றரை மணி நேரம் கேதுவும் அம்பிகையை பூஜிக்கின்றனர்.

அதில் ராகு வழிபாடு செய்யும் நேரம் ராகு காலம் என்றும், கேது வழிபாடு செய்யும் நேரம் எமகண்டம் என்றும் அழைக்கப்படுகிறது.
ராகு காலம் என்பது ஒவ்வொரு நாளிலும் குறிப்பிட்ட ஒன்றரை மணி நேரமாகும்.

ராகு காலத்தில் செய்யப்படும் துர்க்கை பூஜை சிறப்புமிக்கது. செவ்வாய்க் கிழமைகளில் வரும் ராகு காலத்தில் செய்யப்படும் பூஜை அதிலும் சிறப்பு மிகுந்ததாக கருதப்படுகிறது.

ஏனெனில் அந்த தினத்தில் ராகுவோடு இணைந்து செவ்வாயும் அம்பிகையை மங்கள சண்டிகையாக வணங்குகிறார். இதனால் கூடுதல் பலன் கிடைக்கும்.

செவ்வாய்க்கு மங்களன் என்ற பெயர் உள்ளது. பொதுவாக ஒருவரது வாழ்வில் மங்கல காரியங்கள் நடப்பதற்கு செவ்வாய் மற்றும் சர்ப்ப தோசங்களே காரணமாகச் சொல்லப்படுகின்றன.



செவ்வாய், ராகு ஆகிய கிரகங்களால் தோசம் இருந்தாலோ அல்லது வாழ்வில் தடைகளும், துன்பங்களும் தொடர்ந்தாலோ ராகு கால

வழிபாட்டினை மேற்கொண்டு, துர்க்காதேவியை வழிபடுவது நல்ல பலன் தரும்.

நோய்களால் பாதிக்கப் பட்டவர்களின் பிணி தீர வேண்டுமானால், ஞாயிறு மாலை 4.30 - 6.00 ராகு கால வேளையில், துர்க்கை தனித்திருக்கும் ஆலயத்தில்,

ஒரு எலுமிச்சை பழத்தினை இரண்டாக நறுக்கி, சாரு பிழிந்து, விளக்கு போல் திருப்பி, நெய் ஊற்றி, அதன் பின்னரே 5 இழைகள் கொண்ட நூல் திரி போட்டு விளக்கு ஏற்றவேண்டும்.

அடுத்தவர் ஏற்றிய விளக்கில் ஏற்றக்கூடாது. விளக்கினை ஜோடியாக தான் வைக்க வேண்டும். தீப ஒளி அம்மனை நோக்கிய வாறு விளக்கு இருக்க வேண்டும்
செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் துர்க்கையை வணங்கினால், திருமணத் தடை, முன்னேற்றத் தடை, கடன் பிரச்சினைகள்,

சகோதரர்களிடையே ஒற்றுமையின்மை, வீடு, மனை தொடர்பான பிரச்சினைகள், விபத்து பாதிப்புகள் ஆகியவை நீங்கச் செய்யும்

வெள்ளிக்கிழமையில் வரக் கூடிய ராகு கால நேரத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்தால் குடும்பம் பலப்படும்.

கணவன் அல்லது மனைவி ஆயுள் அதிகரிக்கும். இந்த நாளில் கணவருக்காக மனைவியும், மனைவிக்காக கணவரும் வேண்டிக் கொள்ளலாம்.

வேலை கிடப்பது, பதவி உயர்வு கிடைக்க வேண்டும் என்பது போன்ற தனிப்பட்ட வேண்டுதல்கள் ஏதாவது இருந்தால் வெள்ளிக்கிழமையில் ராகு காலத்தில் விளக்கேற்றி, வழிபடலாம். மகன்,மகள், பேரன்-பேத்தி உள்ளிட்ட வாரிசுகளின் வாழ்க்கையில் ஏதாவது பிரச்சனை இருந்தாலும் வெள்ளிக்கிழமையில் வழிபடலாம்.



பொன், பொருள் சேர வேண்டும் என்றாலும், சேமிப்பு உயர வேண்டும் என்றாலும் இந்த நாளில் வழிபாடு செய்யலாம். அமாவாசை பௌர்ணமி அஷ்டமியில் வரும் ராகுகாலத்தில் துர்க்காதேவியை வழிபடும்போது நெய்விழக்கேற்றி வழிபட்டால் பிதிர்தோசங்கள் நீங்கும் முன்னோர் சாபங்கள் நீங்கும் செய்வினைகள் விலகும் சகல தோசங்கள் நீங்கும்

**இராகுகால விபரம்**

திங்கள் காலை மாலை 7:30 - 9:00,
செவ்வாய் மாலை 3:30 - 5:00,
புதன் 12:00 - 1:30,
வியாழன் 1,30 - 3:00,
வெள்ளி 10:30 - 12:00,
சனி 9:00 - 10:30
ஞாயிறு 4:30 - 6:00

எல்லாம் வல்ல எம்பெருமாட்டியின் அருளும் ஆசியும் உங்களுக்கு கிடைக்க வேண்டிக் கொள்கின்றேன்.

**சுந்தர.செந்தில்ராஜ குருக்கள்,**
**பிரதம சிவாச்சாரியார்,**
**துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

## துர்க்கா புரம் மகளிர் மாணவியின் தேசிய மட்ட வெற்றி

துர்க்கா புரம் மகளிர் பள்ளியின் மாணவி செல்வி டயானா கோபாலசிங்கம், தனது சொல் வளமும் சிந்தனைத் திறமையையும் பயன்படுத்தி, தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்டார். அவர் எழுதிய கட்டுரையில் அவரது ஆழமான கருத்துக்களும், மொழி நயமும் அனைவரையும் கவர்ந்தது. இதனால் அவர் இந்தப் போட்டியில் முதல் பரிசைப் பெற்று எமது தேவஸ்தானத்திற்கும் மகளீர் இல்லத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.



# அறநெறிப் பாடசாலைகளுக்கு சிறுவர்களை கட்டாயம் அனுப்பி வையுங்கள்

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தினால் நடத்தப்படுகின்ற அறநெறிப் பாடசாலை தற்போது மேலும் பல வசதிகளுடன் இயங்க ஆரம்பித்துள்ளது. நமது பிள்ளைகளை சிறு வயதில் இருந்தே அறம் மற்றும் ஆன்மீகத்தில் நாட்டமுடைய வர்களாக வளர்த்தெடுக்க வேண்டிய மிக முக்கிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது என்பதை நாம் நன்கறிவோம்.




இளம் பருவத்தில் இருந்தே அறச் சிந்தனைகள் நம் பிள்ளைகளின் மனங்களில் ஆழமாக பதிய தொடங்கும்போது, அவர்களுடைய வாழ்வு நல்லொழுக்கம் உடையதாக மாறிவிடுவதோடு சமூகப் பிறழ்வான நடத்தையில் ஈடுபடுவதையும் தடுக்கின்றது. நமது பிள்ளைகள் சிறு வயது தொடக்கம் அறநெறி பாடசாலைக்கு செல்வதன் மூலம் அவர்கள் அந்த போதனைகளையும் அங்கு கற்பிக்கப்படும் நல்லொழுக்கம், சமய வழிபாடு போன்றவற்றை உள்வாங்கி நமது சமூகத்தின் சிறந்த பிரஜைகளாக உருவாக முடியும் என்பதற்காகவே தேவஸ்தானம் இதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கி பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. நன்கு பயிற்றுவிக்கப்பட்ட சிறந்த ஆசிரியர்கள் மூலம் நமது பிள்ளைகளுக்கு இவை யாவும் முறையாக கற்பிக்கப்படுவதால், உங்கள் பிள்ளைகளையும் தவறமால் எமது அறநெறிப் பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள். அறநெறி கல்வியை முறையாகக் கற்ற மாணவர்கள் பிழையான வழியில் செல்ல மாட்டார்கள். தமது பெற்றோரை வெறுக்க மாட்டார்கள். அயலவர்களுடன் நல்ல உறவை பேணுவார்கள்.

நல்ல நண்பர்களை தேடிக் கொள்வார்கள் என்பது நமது சமூகப் பெரியவர்களின் அனுபவ வாக்காகும் என்பதை சகல பெற்றோர்களும் நன்கறிந்து கொள்ள வேண்டும்.

கல்வியின் சிறந்த குறிக்கோள் பண்புடைமையே என்ற மகுட வாசகத்திற்கு அமைய தேவஸ்தானத்தின் அறநெறிப் பாடசாலை இயங்கி வருகிறது. ஸ்ரீ துர்க்கா தேவி அறநெறிப் பாடசாலையுடன் இணைந்து உங்கள் பிள்ளைகளையும்பண்புடையபிள்ளைகளாகவளர்த்தெடுங்கள்.

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்
(குறள் 131)

பொருள்-ஒழுக்கம் எப்போதும் மேன்மையைத் தருவதனால், அந்த ஒழுக்கமே உயிரினும் மேலானதாகச் சான்றோரால் காக்கப்படும்.

## தேவஸ்தானத்தின் புதிய அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பல்வேறு வசதிகளை கொண்ட புதிய அலுவலக கட்டடத்திற்கான கட்டுமான பணிகளை ஆரம்பிக்கும் நோக்கில், அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.




தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களால் சுப நேரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. தேவஸ்தானத்தில் அலுவலகப் பணிகளை மேலும் வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு ஏற்ப பல புதிய வசதிகளை இவ் அலுவலகம் கொண்டிருக்கும்.

# பக்தர்கள் பொங்கிப் படைத்து வழிபடும் பங்குனித் திங்கள்

வரலாற்று சிறப்புமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம்



1ம்பங்குனித்திங்கள் 17-03-2025
2ம்பங்குனித்திங்கள் 24-03-2025
3ம்பங்குனித்திங்கள் 31-03-2025
4ம்பங்குனித்திங்கள் 07-04-2025

திகதிகளில் இடம்பெறவுள்ளது. பங்குனித்திங்கள் கிழமைகளில் அம்பாளுக்கு விசேட பூசைவழிபாடுகள் அதிகாலை 5.00மணிக்கு உஷத்காலப் பூசையுடன் ஆரம்பமாகி காலை,மாலை அபிஷேகம் விஷேடபூசை, பொங்கல் படையல், அர்ச்சனை என்பன வழமைபோன்று இடம்பெற்று இரவு 9.00 மணிக்கு அர்த்தசாமப்பூசையுடன் பங்குனித்திங்கள் பொங்கல் வழிபாடுகள்நிறைவு பெறும். பக்தர்கள் வழமைபோன்று புனித தீர்த்தக்கேணியில் நீராடி,விரதமிருந்து, பொங்கல், படையல், அர்ச்சனை உள்ளிட்ட தமது நேர்த்திகள், வழிபாடுகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்.



# பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் அமைவிடமும் தல வரலாறும் ஓர் பார்வை



யாழ்ப்பாண நகரத்திலிருந்து சங்கானை வழியாகக் காரைநகர் போகும் வீதியில் ஒன்பதாவது மைலில் உள்ளது பண்ணாகம் என்னும் கிராமம். பண்டு தொட்டு இவ்வூர் ஆலங்காடு என வழங்கி வந்தது. காரைக்கால் அம்மையார் இறைவனுடைய திருநடனத்தைத் கண்டு தரிசித்துக்கொண்டிருந்த தலம் ஆலங்காடு. அந்த தலத்திலிருந்து வந்து இங்கே குடியேறிய முன்னோர் சிலர் இந்த இடத்துக்கும் தாம் பிறந்த திருவாலங்காடு என்ற பெயரைச் சூட்டியிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

பண்ணாகம் சங்கானைக் கோவிற் பற்றுள் அடங்கும். ஏறக்குறைய மூன்று மைல் சுற்றளவும் ஒரு சதுர மைல் பரப்புமுள்ள இவ்வூரில் வைரவ சுவாமிக்கும் காளி தேவிக்கும் கோயில்கள் பல உள்ளன. எனினும் இவ்வூரார் அனைவரும் விசவத்தனை முருகப்பெருமானையே தமது குலதெய்வமாக கொண்டு வழிபடுவர். மேலே குறிப்பிட்ட ஒன்பதாவது மைல் கல்லின் அருகே வடக்கு திசை நோக்கிச் செல்வது விசவத்தனை முருகமூர்த்தி வீதி, அவ்வீதி வழியாக ஐந்நூறு யார் தூரம் வரை செல்ல முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள விசவத்தனைத்தலம் தோன்றும்.

தூல லிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்துக் கோவிலின் தெற்கு வீதியால் சென்றால் வயல்கள் சூழ்ந்த பிரதேசத்தின் நடுவில் முகப்பில் கடம்ப மரம் வாசம் செய்ய முருகப்பெருமானின் தேவஸ்தானத்தை கண்டு தரிசிக்கலாம்.

விநாயகப் பெருமான் விநாயகராக உருவான மாமரமும் சந்நிதான முன்றலில் நிற்பது சிறப்பிற்குரியது. மூர்த்தி, தலவிருட்சம், தீர்த்தகேணி என்பன ஒருங்கே அமையப்பெற்றது முருகப்பெருமானின் திருத்தலமாகும்.

## தல வரலாறு

ஆதியில் விசவத்தனையில் வைரவசுவாமி ஆலயமே இருந்தது. இற்றைக்கு இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கதிர்காமர் என்பவரின் முன்னோராலேயே இந்த வைரவ சுவாமி பிரதிட்டை செய்யப்பட்டு விளக்கேற்றி வழிபடப்பட்டு வந்தார். ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் வரும் முதலாம் செவ்வாயில் விசேட தீபம் ஏற்றப்பட்டு அடுத்த செவ்வாயில் வாழைக்குலைகள் கட்டி , பொங்கல் நடாத்தி விசேட விழா கொண்டாடப்படும். அந்த பாரம்பரியம் இன்றும் தொடர்வது சிறப்பிற்குரியது.

அக்காலத்தில் விசவத்தனை தோட்டங்களில் வாழை, மரவள்ளி, கத்தரி, பூசனி, மிளகாய், வெங்காயம், புகையிலை முதலான பயிர் வகைகள் மிகச்செழித்து வளர்ந்து நல்ல பயன் கொடுத்தன. தோட்டங்களில் ஆங்காங்கு ஆடுகள், மாடுகள் பட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கும். காத்தற் கடவுளாதலால் சேத்திர பாலன் என்னும் பெயர் பெற்ற வைரவப்பெருமான் இரவு நேரங்களில் தோட்டங்கள், வளவுகளுக் கூடாக நடமாடிப் பல அருட்காட்சிகளை காட்டியதாக முதியோர் பலர் பலப்பல செய்திகளை கூறுவர்.

விளைபொருள்களையோ கால்நடைகளையோ கவர்ந்து செல்ல வரும் கள்வர்களை வைரவப் பெருமான் வெருட்டித் துரத்துவார். பொருள்களுக்கு உரியவர்கள் உறங்கும் போது களவு நடைபெற இருப்பதை அவர்களுக்கு கனவிலே தெரிவிக்க, அவர்கள் உடனே விழித்தெழுந்து தத்தம் தோட்டங்களுக்கு சென்று கையும் மெய்யுமாகத் திருடர்களை பிடிப்பார்கள். ஆளரவம் கேட்டுத் திருடர்கள் களவாடிய பொருள்களை விட்டுவிட்டு ஓட்டமெடுப்பதும் உண்டு. இப்படி எத்தனையோ அருட்செயல்களை வைரவப்பெருமான் செய்ததாக முன்னோர்கள் கூறுவர்.

இந்த வைரவப்பெருமான் பிரதிட்டை செய்யப்பட்டிருந்த இடத்துக்கு வடக்கு பக்கத்திலே கதிர்காமரின் மகன் விசுவநாதர் முருகப்பெருமானை பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தார். அந்நாளில் சிறிய மடாலயமாக இருந்தது.



அங்கு கந்த புராணம் படித்து பொருள் கூறி வழிபடும் இடமாக இக்கோவில் இருந்து வந்தது. அன்று முதல் இன்று வரை வழிவழியாக இன்றும் கந்த புராணம் படிக்கப்பட்டு வருவது சிறப்பான பாரம்பரியம் ஆகும்.

முருகப் பெருமான் ஆதி மூலவராக அருளாட்சி புரிய விநாயகப்பெருமான், சண்முகப்பெருமான், முத்துக்குமார சுவாமி, பாலசுப்பிரமணியர், நவக்கிரகம், கொடித்தம்ப பிள்ளையார், வைரவப்பெருமான், சண்டேஸ்வரர் பரிவார தெய்வங்களாக வீற்றிருக்கின்றனர். கருவறையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானும், சண்முக பெருமானும் மிகப்பெரியவர்களாக காட்சியளிப்பது அதிசயமானது.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இம் மடாலயம் புதுப்பிக்கப்பட்டது. கும்பாபிசேகம் நடந்து அலங்கார திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. பின்னர் சைவ ஆகம முறைப்படி கர்ப்பக்கிரகம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், அர்த்த மண்டபம், வசந்த மண்டபம் என்பன அமைத்து கொடித்தம்பம் நிறுவி 1922 ஆம் ஆண்டில் மகா கும்பாபிசேகம் நடத்தினார்கள்.
ஆண்டு தோறும் பங்குனி உத்தர நாளில் தீர்த்ததிருவிழா அமையும் வகையில் உபயகாரர்களை ஒழுங்கு படுத்தி பதினொரு தினங்கள் திருவிழாக்களை நடத்தினார்கள்.

ஆரம்ப காலத்தில் தனி ஒருவரின் கோவிலாக இருந்து பின்னர் பரிபாலன சபையின் ஆளுகைக்குள் வந்தது. 1954 ஆம் ஆண்டு பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபை கோவிலை பராமரிக்கவும், கோவில் சொத்துக்களை பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டது.
சபையின் யாப்பின் பிரகாரம் பொதுச்சபை கூட்டத்தில் தர்மகர்த்தா உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் இருந்து ஏழு பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுவார்கள்.



தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், உப செயலாளர், முகாமையாளர், உப முகாமையாளர் என்போர் அடங்குவர். இவர்களின் கடமைகளாக யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவை. கோவிலின் நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெறுகிறதா என கண்காணித்தல், கோவில் சொத்துக்கள், நிலங்களை பாதுகாத்தல். பரிபாலித்தல் , திருப்பணிகளை செய்வித்தல், திருவிழாக்களை ஒழுங்காக நடத்துவித்தல் போன்ற இன்னோரன்ன அடங்கும்.

கடந்த காலங்களில் சுமார் ஐந்து கோடி ரூபா நிதி மதிப்பீட்டில் பெருந்திருப்பணி வேலைகள் நிகழப்பெற்று தொடர்ந்து 14.09.2018 இல் மகா கும்பாபிசேகம் நிகழ்ந்து முருகப்பெருமானின் திருத்தலம் அழகுற காட்சிதர எம்பெருமான் விருப்புடன் எழுந்தருளி காட்சி தருகிறார்.

கோவிலில் தினமும் மூன்று காலப்பூசைகள் நடைபெறுகின்றன.
காலை - 7.00 மணி,
மதியம் - 12.00 மணி,
மாலை - 5.00 மணி.

இவை தவிர தைப்பூசத்திருவிழா, சிவராத்திரி, பங்குனி மாத மகோற்சவம், மாதம் தோறும் வரும் கார்த்திகைத் திருவிழா, புதுவருடப்பிறப்பு திருவிழா, வைகாசி விசாகத்திருவிழா, ஆவணி விநாயக சதுர்த்தி உற்சவம், கந்த சட்டித் திருவிழா, தீபாவளித் திருவிழா, பிள்ளையார் பெருங்கதை பூசை, திருவெம்பாவைத் திருவிழா, சமய குரவர்களின் குருபூஜை என்பன வருடந்தோறும் சிறப்புற நடைபெறுவது சிறப்பிற்குரியது.

ஆக்கம் – மு.பாபுஜி
பண்ணாகம்

ஆதாரம் – விசவத்துனை முருகப்பெருமான்
நூல் ஆசிரியர் – பண்டிதர் அ.ஆறுமுகம்


# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கந்தபுராணம் வெளியிடப்பட்டது

திருமுறைகளை பாதுகாத்து போற்றும் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தைப்பூச தினத்தன்று நடைபெற்ற நிகழ்வில் கந்தபுராணம் உற்பத்தி காண்டம் பகுதி 2 நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. இந்த நூல் வெளியீட்டிற்கு அவுஸ்திரேலியா சிட்னி உலக சைவப் பேரவையின் நிதிப் பங்களிப்பு முக்கிய பங்கு வகித்தது.




இதில், தெல்லிப்பழைச் சைவப் பெரியார் அமரர் க. அய்யாத்துரை அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தினர் உலக சைவப் பேரவையூடாக நிதிப் பங்களிப்பு செய்தனர். இதுவரை பன்னிரு திருமுறைகள் அனைத்தும் வெளியிடப்பட்டுள்ளதுடன், கந்தபுராணத்தின் தொகுதி 1 வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வு பக்தர்களுக்கும் அறிஞர்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியதுடன், சைவ நூல்களை பாதுகாக்கும் பணியில் இதுவும் முக்கியமான ஒரு படியாக அமைந்தது.



# எமது இல்ல மகள் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மகளீர் இல்ல மகள் நிருத்திகா 12.02.2024 அன்று இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார்.

சிறு வயது தொடக்கம் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மகளிர் இல்லத்தில் வளர்ந்து, நன்றாக கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று தனது பட்டப்படிப்பை நிறைவு செய்த இல்ல மகள் நிருத்திகா தெல்லி நகர் அன்னைக்கு முன்பாக எமது அன்னபூரணி மண்டபத்தில் இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார்.

இல்ல மகளுக்கு தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள் தந்தையாக சகல கடமைகளையும் நிறைவேற்றி இல்ல மகளை ஆசீர்வதித்தார்.

மாப்பிள்ளை வீட்டார், தேவஸ்தானத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள், சக இல்ல பிள்ளைகள், ஆசிரியர்கள், பணியாளர்கள், அன்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



